முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம் - 1 விழுப்புரம்

**<u>O.S No.334/2022</u>**

**<u>Witness PW 1</u>**

பெயர்: மகேஷ்

த/பெ.: சுந்தரமூர்த்தி

இன்று (24.01.2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

<u>சத்தியமாக சொல்கிறேன்</u>

எனக்கு பூர்வீகம் வடகுறிச்சிபாளைம் என்றால் சரிதான். எனக்கு கிரையம் கொடுத்த புனிதா என்பவர் எனக்கு உறவினரா என்றால் பங்காளி உறவு. புனிதாவின் தந்தை சுப்பிரமணியும் எனக்கு பங்காளி என்றால் சரிதான். எத்தனை அயிட்ட சொத்துகள் இந்த வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் ஒரு அயிட்ட சொத்து தான். தாவா சொத்தின் சர்வே எண்.216/2, தாவா சொத்தின் நான்கு எல்லைகள் தெரியுமா என்றால் தெற்கே பிள்ளையார் கோவில் வீதி, வடக்கே ஊரல்வாய்க்கால், கிழக்கே குப்புசாமி கவுண்டர், மேற்கே தற்போது உள்ளவர் பூங்காவனம், ஏற்கனவே யார் இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. சொத்தின் மொத்த விஸ்தீரணம் 4 1/2 செண்ட். தாவா சொத்து புனிதாவிற்கு எப்படி கிடைத்தது என்றால் அவரது தந்தையார் சுப்பிரமணியன் தானமாக கொடுத்த சொத்து. எந்த வருடம் தானமாக கொடுத்தார் என்றால் 2008ல் தானமாக கொடுத்தார். சுப்பிரமணிக்கு சொத்து எப்படி வந்தது சுப்பிரமணயின் பூர்வீக சொத்து. சுப்பிரமணியின் உடன் பிறந்தவர்கள் ரங்கநாதன். சுப்பிரமணிக்கும், ரங்கநாதனுக்கும் அப்பா பாவாடை கவுண்டர் என்றால் சரிதான். சுப்பிரமணி, ரங்கநாதன் மற்றும் எனது தந்தை பாவாடை ஆகியோருக்கு இடையே பாகம் ஏற்பட்டது என்று தெரியுமா என்றால் 1970ல் சுப்பிரமணிக்கும், ரங்கநாதனுக்கும் இடையே பாகம் பிரித்து கொண்டார்கள். 1970ல் ஏற்பட்ட பாக ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். 1970ல் நான் பிறக்கவில்லை என்றால் சரிதான். 1970ல் ஏற்பட்ட பாகம் எனக்கு நேரடியாக தெரியாது, ஆவணத்தை பார்த்து தான் தெரிந்து கொண்டேன். 1970 பாக பிரிவினை பத்திரத்தில் யார் யாருக்கு எந்த எந்த சொத்து ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சுப்பிரமணியத்திற்கு ஏ-அட்டவணை, ரங்கநாதனுக்கு பி-அட்டவணை

ஒதுக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 நான் தாக்கல் செய்துள்ள பாக பத்திரம் என்றால் சரிதான். தாவா சொத்து பாகப்பிரிவினை பத்திரத்தில் சுப்பிரமணியத்திற்கு ஒதுக்கப்பட்டது என்று நான் பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். வழக்கு சொத்து முழுவதுமாக சுப்பிரமணியத்திற்கு பாகமாக வந்துள்ளதா என்றால் முழுவதுமாக தான் வந்துள்ளது. வழக்கு சொத்தின் பழைய சர்வே எண்.216 1.20 ஏக்கர் என்றால் சரிதான். வா.த.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரத்தில் ஏ-அட்டவணையில் சுப்பிரமணியத்திற்கு பாகமாக ஒதுக்கப்பட்ட மனை பிள்ளையார் கோவில் வீதிக்கு வடக்கு, பின்பவரும் காலிமனைக்கு தெற்கு, குப்புசாமி கவுண்டர் வீட்டிற்கு மேற்கு, மகாதேவன் வீட்டிற்கும் கிழக்கு அதனிடையில் ஒரு செண்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் பிறகு  மேற்கண்ட வீட்டிற்கு வடக்கு, புஷ்பாம்மாள் காலிமனைக்கு தெற்கு, குப்புசாமிக்கு மேற்கு பூங்காவனம் வீட்டிற்கு கிழக்கு கி-மே.18, தெ-வ.16 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கி-மே.18, தெ-வ.16 என்று இன்னொரு செண்ட் நிலம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கண்டவைகள் தான் சுப்பிரமணியத்திற்கு பாகத்தில் கிடைத்த வீட்டு மனை என்றால் சரிதான். சர்வே எண்.216 1.20 செண்டில் ரங்கநாதனுக்கு கி-மே12, தெ-வ31 சொத்து ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், அதன் நான்கு எல்லைகள் பிள்ளையால் கோவில் வீதிக்கும் தெற்கு, காத்தவராயன் வீட்டிற்கு வடக்கு, பொது வழிநடை சந்துக்கும் மேற்கு, பாலுசாமி கவுண்டர் வீட்டிற்கும் கிழக்கு என்றால் சரிதான். பாகப்பிரிவினையில் சுப்பிரமணியத்திற்கு 3 செண்டிற்கு குறைவாக தான் சர்வே எண்.216ல் வந்துள்ளது என்றால் சரிதான். சுப்பிரமணியன் மனைவி புஷ்பா என்பவருக்கு உள்ள சொத்து எந்த இடத்தில் உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் அதன் சர்வே எண் தெரியாது, ஆனால் வழக்கு சொத்திற்கு பக்கத்தில் புஷ்பாவிற்கு சொத்து உள்ளது. புஷ்பா சொத்திற்கு நான்கு புற எல்லைகள் தெரியுமா என்றால் தெரியாது. சாட்சி தன்னை மாற்றிக்கொண்டு  புஷ்பாவின் நிலம் சர்வே எண்.216ல் 1.20 செண்டில் தான் வருகிறது என்று சாட்சியம் அளிக்கிறார்.  புஷ்பாவிற்கு எவ்வளவு விஸ்தீரணம் பாத்தியம் என்று சொல்கிறேன் என்றால் 1 1/2 செண்டிற்கு மேல் இருப்பதாக சொன்னார்கள். புஷ்பா சொத்தின் 1 1/2 செண்டிற்கு நான்கு எல்லைகள் ஊரல்வாய்க்காலுக்கு தெற்கு, குப்புசாமிமனைக்கு மேற்கு, பூங்காவனம் மனைக்கு கிழக்கு, சுப்பிரமணி மனைக்கு வடக்கு. மேற்சொன்ன நான்கு புற எல்லைக்கு உட்பட்டது தான்

புஷ்பாவின் நிலம். புஷ்பாவிற்கு நிலம் எப்படி வந்தது என்றால் திருமணம் ஆகி வந்த போது மகாதேவன் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றதாக சொன்னார். எந்த வருடம் தெரியுமா என்றால் தெரியாது. அதற்கான ஆவணங்கள் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த இடம் தற்போது காலியாக தான் உள்ளது என்றால் சரியல்ல, பாத்ரூம் கட்டியுள்ளேன், வாழை மரம் வைத்துள்ளேன். மேற்படி விவரத்தை நான் வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். தாவா சொத்து காலிமனையாக உள்ளதால் வரிவிதிப்பு இல்லை என்று எனது வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சுப்பிரமணி மற்றும் ரங்கநாதன் ஆகியோர்களுக்கு இடையே முறையாக பாகம் ஏற்பட்டதா என்று நான் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன் சுப்பிரமணி மனைவி சொன்னார். வா.த.சா.ஆ.1 பாகப்பத்திரத்தில் ரங்கநாதன் கையெழுத்து இடவில்லை, அது சுப்பிரமணி சுயமாக ஏற்படுத்திக்கொண்டது என்றால் சரியல்ல. ரங்கநாதன் ஏற்படுத்திய வேறு ஆவணம் ஏதாவது பார்த்துள்ளேனா என்றால் இல்லை. வா.த.சா.ஆ.1 முறையாக ஏற்படவில்லை என்றால் சரியல்ல, ஆவணத்தில் முறையாக பதிவு செய்யப்பட்டுள்ளது. வா.த.சா.ஆ.1 பத்திரப்படியே 3 செண்டிற்கு கீழ் தான் சுப்பிரமணியத்திற்கு உள்ளது, ஆகையால் அவர்கள் தான செட்டில்மெண்ட் 4 1/2 செண்டிற்கு கொடுத்தது செல்லாது என்றால் சரியல்ல. புஷ்பா 1 1/2 செண்டிற்கு உரிமையாளரோ, அனுபவஸ்தரோ கிடையாது என்றால் சரியல்ல. பட்டா தவறானது என்றால் சரியல்ல. தான செட்டில்மெண்டில் புனிதா தரப்பினராக இருந்து கையெழுத்திட்டுள்ளாரா என்றால் இல்லை. பட்டா கொடுப்பதற்கு முன்பாகவே சுப்பிரமணி இறந்துவிட்டார் என்றால் சரிதான். புஷ்பா பெயரில் பட்டா இருந்ததா என்றால் இல்லை. சுப்பிரமணி பெயரில் ஏற்கனவே பட்டா இருந்தது, அதன் பிறகு புனிதா பெயரில் பட்டா ஏற்பட்டது. சுப்பிரமணி பெயரில் எத்தனை செண்டிற்கு பட்டா இருந்தது என்றால் 4 1/2 செண்ட். புஷ்பா பெயரில் உள்ள கிரைய ஆவணத்தையோ அல்லது பட்டாவையோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கில் கண்ட பிரதிவாதிகள் தாவா சொத்து சம்மந்தமாக புஷ்பா மீது விழுப்புரம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.289/2013 என்ற வழக்கு பாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது, ஆனால் வழக்கு இருப்பதாக நான் வாங்கிய பிறகு பிரதிவாதிகள் சொன்னார்கள்.

பிரதிவாதிகளின் பாக உரிமையை முறியடிக்க வேண்டி புனிதா பெயரில் பெயரளவில் ஒரு தான செட்டில்மெண்ட் ஏற்படுத்தி அதன்மூலம் என் பெயருக்கு ஒரு கிரைய பத்திரம் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புனிதா பெயரில் ஏற்பட்ட தான செட்டில்மெண்ட் செல்லத்தக்கது அல்ல, அதனால் அவர் என் பெயரில் ஏற்படுத்திய கிரைய பத்திரம் செல்லாதது என்றால் சரியல்ல. நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

x

**Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.**

**(Sd/-A. Tamilselvan)**
**I Additional Subordinate Judge (FAC),**
**Villupuram**